6 இது குறித்த கோரிக்கை இதுவரை எதும் பெறப்படாததால் 'ரூரல் சர்வீஸ்' என்ற பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு கூட்டுறவுப் பயிற்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்கும் பிரச்சினை பற்றி பரிசீலிக்க வாய்ப்பு ஏதும் ஏற்பட வில்லை.

(ஆ) கிராம நிர்வாக அலுவலராகத் தேர்வு செய்யப் பட்டவர்களுக்குப் பணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஈ. வே. கி. ச. இளங்கோவன், பி. கே. எம். முத்துராமலிங்கம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுக்குப் பதிலாக திரு. தி. அன்பழகன் அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராம நிர்வாக அலுவலர் 382 பேர் மூன்று ஆண்டுகளுக்கு முன் தேர்வு செய்யப்பட்டும், இதுவரை பணி நியமனம் செய்யப் படாமல் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

பகுதி நேர கிராம அதிகாரிகளின் பதவிகள் தமிழ்நாட்டுச் சட்டம் 3/81-ன்படி 14—11—1980 முதல் நீக்கப்பட்டன. அப்பொழுது 12,498 முழுநேர கிராம அலுவலர் பணியிடங்கள் அரசால் தோற்றுவிக்கப்பட்டன. மேற்சொன்ன சட்டத்தை எதிர்த்து முன்னாள் கிராம அதிகாரிகள் உச்சநீதி மன்றத்தில் வழக்குகள் தொடுத்தனர். அவ்வழக்குகளை அம்மன்றம் தள்ளுபடி செய்தபொழுது, ஓய்வு பெறும் வயதடையாத கல்வித் தகுதி பெற்ற முன்னாள் கிராம அதிகாரிகளை அவர்களின் உடல்நிலை மற்றும் முன்பு பெற்ற தண்டனைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கிராம நிர்வாக அலுவலர்களாகத் தெரிவு செய்யுமாறு அம்மன்றம் ஆணையிட்டது. அவ்வாணைக்கிணங்க அரசானது மாநில மற்றும் மாவட்டக் குழுக்களை அமைத்து அக்குழுக்களின் வழியாக நபர்களைத் தெரிவுசெய்து அவர்களை கிராம நிர்வாக

1987 ஏப்ரல் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அலுவலர்களாகப் பணியமர்த்தியது. முன்னாள் கிராம அதிகாரி களினால் நிரப்பப்பட்ட பணியிடங்கள் போக மீதமுள்ள கிராம நிர்வாக அலுவலர்களின் பணியிடங்களுக்காகவும் வைகு பட்டியலுக்காக (காத்திருப்போர் பட்டியலுக்காக) மொத்தப் பணியிடங்களில் 15 விழுக்காட்டுப் பணியிடங்களுக்காகவும் ஆட்களைத் தெரிவு செய்யுமாறு தமிழ்நாட்டு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டது, அவ்வாறு தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட நபர்களில் வைகு பட்டியலில் உள்ள 359 பேர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் கிராம நிருவாக அலுவலர் பதவிகள் அளிக்கப்பட்டுவிட்டன.

2. அனைத்து மாவட்டங்களிலும் இப்பொழுது வெறுமையாய் உள்ள பணியிடங்கள் 195. தேர்வாணையத்தால் தெரிவு செய்யப் பட்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ள 359 பேர்களுக்கும் நில அளவை மற்றும் கிராம நிருவாகம் ஆகியவற்றில் பயிற்சியளிக்க செயற்குறிப்பொன்று அரசின் ஆய்விலுள்ளது. இவர்களுக்குப் பயிற்சியளித்தவுடன் இவர்களில் 195 பேர் தற்போது வெறுமையா யுள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்படுவர். மீதமுள்ளவர்கள் இனிமேல் அவ்வப்போது ஏற்படும் வெற்றிடங்களில் வரிசை முறை படி பணியமர்த்தப்படுவர். வைகு பட்டியலில் உள்ளோர் அனை வரும் தங்களுக்குப் பணி வழங்கப்படுமென்று எதிர்பார்த்தல் கூடாது. அவர்களுக்குக் கட்டாயம் பணி வழங்கப்படுமென்று உறுதி கூறவுமியலாது.

(இ) பர்மா அகதிகளுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் துள்ளார். அவருக்குப் பதிலாக டாக்டர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வருவாய்த் துறையின் 6—12—1979 ஆம் தேதியிட்ட அரசாணை எண் 2778 இல் வியாசர்பாடி, எரிப் பகுதியில் பெரம்பூர் கிராமம் சர்வே எண் 779/33-ல் உள்பட்ட 139 எக்கர் நிலத்தில் 3,132 பர்மா அகதிகளுக்கு நபர் ஒருவருக்கு அரை கிரவுண்டுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ